IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

MCOP. No.43/2021

Deposition of RW 3 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on **06.12.2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | ஆர்.பக்தவத்சலன் | **Caste** | : | |
| **S/o.** | : | டி.ராமகிருஷ்ணன் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை :–**

நான் இந்த மனுவில் 3 ஆம் எதிர்மனுதாரர் ஆவேன். என் தரப்பு சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை படித்துப்பார்த்து அவைகள் யாவும் உண்மை என தெரிந்து கையெழுத்து செய்தேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய அறிவுரையின் பேரில்தான் என்னுடைய வழக்கறிஞரால் அது தயார் செய்யப்பட்டது. பிரமாண வாக்குமூலத்துடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய கேட்டுக் கொள்கிறேன்.

| S.No. | Date | Documents | Remarks |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.7 | – | 1 ஆம் எதிர்மனுதாரர் J.லதா என்பவரின் MGV TIPPER LORRY TN 43 A 0587 என்ற பதிவு எண் கொண்ட SWARAJ MAZDA என்ற சரக்கு வாகனத்திற்கு 3 ஆம் எதிர்மனுதாரரிடம் பெற்ற பாலிசி. | அலுவலக நகல் |

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

நான் கடந்த 2016ம் வருடம் மார்ச் மாதத்தில் இருந்து 3 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். மனுவில் கண்ட சங்கதிகள் மற்றும் இவ்வழக்கில் நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தும் எனக்கு நேரிடையாக தெரியும் என்றால் சரிதான். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். அதனால் விபத்தில் இறந்துபோனவர் ஹெல்மெட் அணிந்து சென்றாரா இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். முதல் தகவல்அறிக்கையின் அடிப்படையில்

தான் நான் முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தயார் செய்தேனா என்றால் கோப்பின் அடிப்படையில் தயார் செய்தேன். மேற்படி கோப்பில் முதல் தகவல்அறிக்கை உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிருரை நான்தாக்கல் செய்தேனா அல்லது எனக்கு முன்பாக பணியில் இருந்த அலுவலர் தாக்கல் செய்தாரா என்றால் எனக்கு முன்பாக பணியில் இருந்த அலுவலர் தாக்கல் செய்தார். முதல் தகவல் அறிக்கையின்படி இறந்து போன நபர் ஓட்டி முன்னால் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது பின்னால் வந்த லாரி மோதி விபத்து ஏற்பட்டதாகதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இருவாகனங்கள் நேர் எதிரே மோதிக் கொள்வதுதான் collision என்று சொன்னால் சரியல்ல. இருவாகனங்கள் எப்படி மோதிக்கொண்டாலும் அது collision தான். நான் சொல்வது தவறு என்றும் பின்னால் செல்லும் வாகனம் முன்னால் செல்லும் வாகனத்தின் மீது மோதினால் அதற்கு Hit (மோதுதல்) என்ற அடைசொல்லுக்குள் வரும் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சாலையின் குறுக்கே வந்தபோது சாலை விபத்து ஏற்பட்டதாக ஆவணங்களுக்கு எதிராக நான் சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரியல்ல. கோப்புகளின் அடிப்படையில் விபத்து நடந்தது உண்மை என்று தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். மேற்படி விபத்தில் இருசக்கர வாகனத்தில் சென்ற நபர் இறந்துவிட்டார் என்பது உண்மை என்று தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். இந்த வழக்கை பொறுத்த வரை லாரியின் ஓட்டுனரை எங்கள் தரப்பில் சாட்சியாக விசாரித்துள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு விசாரித்திருப்பதால் மோட்டார் வாகன சட்டம் பிரிவு 170 யின் கீழ் எதிர்வாதம் எடுக்க எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தில் சென்ற நபர் அவரே இறப்பை ஏற்படுத்திக்கொண்டார் என்று நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. இறந்து போன நபருக்கு ஓட்டுனர் உரிமம் எப்போது காலாவதியானது என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாகனத்தை ஓட்டுவது குறித்து ஒருமுறை ஒரு நபர் கற்றுக்கொண்டால் அதை அவரால் மறக்க முடியாது என்றும் அதனால் ஓட்டுனர் உரிமத்தை புதுப்பிக்கவேண்டியது கட்டாயமல்ல என்றால் சரியல்ல. லாரியின் உரிமையாளரை விசாரிக்க நான் முயற்சி செய்யவில்லை என்றால் இதுவரை செய்யவில்லை. இதற்கு மேல் விசாரிக்க நடவடிக்கை எடுப்பேன். விபத்து நடக்கவில்லை என்றோ, முதல்

தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் தவறு என்றோ அது குறித்து ரத்து செய்யகோரி நாங்கள் எதுவும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சம்பவம் நடந்தது உண்மை என்பதால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கவில்லை. ஓட்டுனர் மீது பதிவுசெய்யப்பட்ட குற்ற வழக்கு என்ன ஆனது என்று தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விபத்து நடந்த சமயத்தில் விபத்தை ஏற்படுத்திய லாரிக்கு முறையான காப்பீடு இருந்தது என்றால் சரிதான். மேற்படி காப்பீடு ஆவணத்தை தான் நான் எ.ம.சா.ஆ.7 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றும் அது இம்மனுவில் சம்மந்தப்பட்ட விபத்திற்கு தொடர்புடையது என்றும் சொன்னால் சரிதான். இவ்வழக்கின் மனுதாரர்கள் இறந்துபோன நபரின் வாரிசுகள் என்பது உண்மைதான் என்றால் சரிதான். மனுவில் மனுதாரர்கள் எதிர்மனுதாரர்கள் கூட்டாகவும், தனிதனியாகவும் இழப்பீடு தர கடமைப்பட்டவர்கள் என்று கேட்டுள்ளார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கை பொறுத்தவரை 1 ஆம் எதிர்மனுதாரர் எங்கள் அலுவலகத்தில் முறையான காப்பீடு பெற்றிருப்பதால் இந்த வழக்கிற்கு நாங்கள் மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. நீதிமன்றம் குறிப்பிடும் இழப்பீட்டை வழங்க நாங்கள்தான் கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

ஒம்/–ஆர்.பக்தவத்சலன்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–எல்.கமலகண்ணன்,
சார்பு நீதிபதி,
மேட்டுர்.